Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 142 | உள்ளூர் - 22.05.2026 | வெள்ளி | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 142 | வெளியூர் - 23.05.2026 | சனி | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

**த.நா கூட்டுறவு வங்கி லிட். காலியிடங்கள்!**

**பணத்தை சேமிக்க விரும்பும் நபர்களின் பிறந்த தேதிகள்!**

**விசிக, முஸ்லிம் லீக் அமைச்சர்கள் பதவியேற்பு!**

**திமுக-விசிக இடையே லடாய்...!**

# பிரதமர் மோடியை சந்திக்க டெல்லி செல்கிறார் முதலமைச்சர் விஜய்!

சென்னை, மே. 22–

தமிழ்நாடு முதலமைச்சராக கடந்த 10–ந்தேதி விஜய் பதவியேற்றார். பதவி ஏற்ற நாளில் இருந்து தினமும் தலைமைச் செயலகம் வந்து அவர் பணியாற்றி வருகிறார்.

புதிய அரசு அமைந்த உடன் மரியாதை நிமித்தமாக முதலமைச்சர் விஜய், திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, விசிக தலைவர் திருமாவளவன் ஆகியோரை சந்தித்தார்.





இந்நிலையில் முதலமைச்சர் விஜய் அடுத்த வாரம் டெல்லி செல்ல உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. அடுத்த வாரம் டெல்லி செல்லும் அவர் பிரதமர் மோடி, சோனியா காந்தி, எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்டோரை சந்திக்க உள்ளார். தமிழக அரசின் ரூ.65 லட்சம் நிதி உதவியுடன் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் 7 அடி உயர வள்ளுவர் சிலை நிறுவப்பட்டுள்ளது. முதலமைச்சர் விஜய் நேரு பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்ட திருவள்ளுவர் சிலையை திறந்து வைக்க உள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

# இந்தியாவின் சந்திரயான்-3 திட்டம்; அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனம் விருது வழங்கி கவுரவிப்பு

2026ம் ஆண்டிற்கான கோடார்ட் விண்வெளி ஆய்வு விருதை இந்தியா வின் சந்திரயான்–3 திட்டத்திற்கு அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனம் வழங்கியது. அமெரிக்காவி ற்கான இந்தியத் தூதர் வினய் குவாத்ரா இந்த விருதை பெற்றுக்கொண்டார்.



சந்திரயான்–3 என்பது இந்திய விண்வெளி ஆய்வு மையத்தால் நிலவின் தென் துருவப் பகுதியை ஆய்வு செய்வதற்காக உருவாக்கப்பட்ட விண்கலத் திட்டமாகும். நிலவின் மேற்பரப்பில் விண்கலத்தை மெதுவாகவும் பாதுகாப்பாகவும் தரையிறக்கும் திறனை நிரூபித்ததன் மூலம், உலக அளவில் நிலவின் தென் துருவத்தில் தரையிறங்கிய முதல் நாடு என்ற வரலாற்றுச் சாதனையை இந்தியா படைத்தது. இந்தியாவின் சந்திரயான்–3 திட்டத்திற்கு, அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனம் 2026ம் ஆண்டிற்கான கோடார்ட் விண்வெளி ஆய்வு விருதை வழங்கி கவுரவித்தது. அமெரிக்காவிற்கான இந்தியத் தூதர் வினய் குவாத்ரா இந்த விருதை பெற்றுக்கொண்டார்.

பிறகு இந்தியத் தூதர் வினய் குவாத்ரா பேசிய போது, பிரதமர் மோடியின் தொலைநோக்குப் பார்வையையும், விண்வெளி ஆய்வு, விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் திட்டம் ஆகியவற்றிற்கான இந்தியா மேற்கொண்டு வரும் நடவடிக்கையை எடுத்துரைத்தார்.

அவர், விண்வெளி ஆய்வில் இந்தியா மற்றும் அமெரிக்கா தொழில்துறைகள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு இடையிலான உறவை வலுப்படுத்தவும் அழைப்பு விடுத்தார். கோடார்ட் விண்வெளி ஆய்வு விருது என்பது விண்வெளித் துறையில் மிகச் சிறப்பான சாதனைகளுக்காக அமெரிக்க விண்வெளி நிறுவனம் வழங்கும் மிக உயரிய விருதாகும் என்பது குறிப்பிடத்தக்கது.



தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜயை தலைமைச் செயலகத்தில், அமைச்சர்களாக பொறுப்பேற்றுக் கொண்ட காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த எஸ். ராஜேஷ் குமார் மற்றும் பி. விஸ்வநாதன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த வன்னி அரசு, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியைச் சார்ந்த அ.மு. ஷாஜகான் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய்யை தலைமைச் செயலகத்தில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன், பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான து. ரவிக்குமார், பொதுச் செயலாளர் எம். சிந்தனைச்செல்வன் ஆகியோர் சந்தித்துப் பேசினர்.

# திமுக-விசிக இடையே லடாய்...!

சென்னை, மே. 22–

திருமாவளவன் மீது கடும் விமர்சனம் வைக்கப்பட்டு வருகிறது. அமைச்சரவையில் இடம்பெறுவது மூலம் திமுக கூட்டணியில் இருந்து விடுதலை சிறுத்தைகள், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சி ஆகியவை வெளி யேறியுள்ளது. இதனால் விசிக தலைவர் திருமா வளவனை திமுகவினர் கடுமையாக சாடி வருகின்ற னர். அதன்படி திமுகவின் துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா வெளியிட்டுள்ள பதிவும், அதற்கு விசிக கொடுத்துள்ள பதிலடியும், அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. திமுக எம்.பி. ராஜாவின் பதிவுக்கு விசிக பொருளாளர் எஸ்எஸ்.




பாலாஜி பதிலடி கொடுத்து ள்ளார். அவரது பதிவில், அதிகாரம் எளியவர்கடு.. .அதிலென்ன ஆத்திரம், . ஆற்றாமையால் அள்ளி வீசும் அவதூறுகள் அசைத்திடாது ... அமைதியாய் கடப்பது அநாகரீகம் தவிர்க்கவே. அநீதி தொடர்ந்து அனைத்தும் உரைத்தால் அணைக்க முடியா... என குறிப்பிட்டுடள்ளார்

அதுபோல, "நாங்கள் இடம் பெறாத அமைச்சரவையில் எவன் இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன?" என வன்மத்தை கக்கி இருக்கிறது குரைப்பதற்காகவே அறிவாலய வாசலில் கட்டி வைக்கப்பட்டிருக்கும் O.R.S. பாரதி என விசிக அனுதாபி ஒருவர் பதிவிட்டுள்ளார்.

இதன் காரணமகா திமுக கூட்டணியில் மேலும் விரிசல் எழும் வாய்ப்பு உருவாகி உள்ளது. இதற்கிடையில், திமுக கூட்டணியில் இரண்டு தொகுதியில் போட்டியிட்டு, ஒரு தொகுதியில் வெற்றிபெற்ற மனிதநேய மக்கள் கட்சி தலைவர் ஜவாஹிருல்ல, இனி வரும் தேர்தல்களில் தாங்கள், திமுக சின்னத்தில் போட்டியிட மாட்டோம், தங்களது கட்சி சின்னத்தி ல்தான் போட்டியிடுவோம் என கூறியிருக்கிறார். இது மேலும் சலசலப்பை ஏற்படுத்தி உள்ளது.

# சிக்கல்!!

# வீட்டு கடன், வாகன கடன் வாங்கியவர்களுக்கு!!

# ஜூன் 5-ல்

## முக்கிய முடிவை வெளியிட தயாராகும் ஆர்பிஐ!!

புதுடெல்லி, மே. 22–

ஈரான் போர் காரணமாக உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலைகள் உயர்ந்திருக்கின்றன. இதனால் அமெரிக்க டாலர் ஒவ்வொரு நாளும் வலுவடைந்து வருகிறது. ஒருபுறம் கச்சா எண்ணெய் அதிக விலை கொடுத்து இந்தியா வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது, மறுபுறம் கச்சா எண்ணெய் வாங்குவதற்கு தேவையான அமெரிக்க டாலர் கையிருப்பு வேகமாக குறைந்து வருகி றது. அமெரிக்க டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு ஒவ்வொரு நாளும் புதிய வீழ்ச்சியை கண்டு வருகிறது. விரைவில் அமெரிக்க டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு 100 ரூபாயை எட்ட கூடும்என சொல்லப்படுகிறது. இப்படி ரூபாய் மதிப்பு சரிவதால் முன்பை விட அதிக பணத்தை கொடுத்து அமெரிக்கா டாலரை வாங்கி தான் இந்தியா கச்சா எண்ணையை இறக்குமதி செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது.






கச்சா எண்ணெய் மட்டுமல்ல, தங்கம், வெள்ளி என அனைத்து இறக்கும திக்கும் நாம் அதிகம் செலவிட வேண்டிய சூழல் உண்டாகியுள்ளது. அமெ ரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பு ஒவ்வொரு நாளும் சரிவை சந்தித்து வரக்கூடிய சூழலில் அதனை நிலை நிறுத்த வேண்டிய கட்டாயம் மத்திய அரசுக்கும் இந்திய ரிசர்வ் வங்கிக்கும் உண்டாகி இருக்கிறது. எனவே இந்திய ரிசர்வ் வங்கி இந்திய ரூபாயின் மதிப்பை நிலை நிறுத்த வரும் ஜூன் மாதத்தில் பல முக்கியமான அறிவிப்புகளை வெளியிட வாய்ப்பு இருப்பதாக ஸ்டாண்டர்ட் சார்ட்டட் நிறுவனத்தின் பொருளாதார நிபுணர்கள் அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

பல்வேறு ஆசிய நாடுகளின் மத்திய வங்கிகள் தங்களு டைய பொருளாதாரத்தை பாதுகாத்து கொள்வதற்காக வட்டி விகிதங்களை உயர்த்தி இருக்கின்றன.

அதேபோன்ற ஒரு அறிவிப்பை இந்திய ரிசர்வ் வங்கியும் வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

50 அடிப்படை புள்ளிக ளாவது வட்டி உயர்த்தப்படும் என அவர்கள் கருத்து கூறு கின்றனர் ஜூன் மாதத்தில் இல்லை என்றாலும் நிச்சயமாக ஆகஸ்ட் மாதத்தில் நடைபெறக்கூடிய நாணய கொள்கை குழு கூட்டத்தில் இந்திய ரிசர்வ் வங்கி வட்டி விகிதத்தை உயர்த்தும் என தெரிவித்து இருக்கின்றனர்.

இந்திய ரிசர்வ் வங்கியின் நாணய கொள்கை குழு கூட்டம் ஜூன் மாதம் மூன்றாம் தேதி நடைபெற இருக்கிறது ஜூன் 5ஆம் தேதி ரிசர்வ் வங்கி ஆளுநர் செய்தியாளர்களை சந்தித்து கூட்டத்தில் எடுத்த முடிவுகளை அறிவிப்பார். ஒருவேளை ரெப்போ வட்டி விகிதத்தை உயர்த்தினால் நம் வீட்டு கடன், வாகன கடன்களுக்கான வட்டியும் பெருமளவில் உயரும். தற்போது ரெப்போ வட்டி 5. 25% என்ற அளவில் இருக்கிறது. கடந்த ஆண்டில் மட்டும் 1சதவீதம் குறைக்க ப்பட்ட ரெப்போ வட்டி இந்த ஆண்டு ஈரான் போர் கார ணமாக உயர்த்தப்பட உள்ளது. தற்போதுள்ள போர் சூழல் இந்திய ரூபாயின் மதிப்பு சரிந்து வருவதால் பொருளாதாரத்தை நிலைப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக ரிசர்வ் வங்கி வட்டி விகிதத்தை உயர்த்தும் என சொல்லப்படு கிறது. அப்படி ரெப்போ வட்டி உயர்ந்தால் வங்கிகள் சாமானிய மக்களுக்கு கொடுத்த கடன்களின் வட்டியை உயர்த்தும். எனவே நம்முடைய கையில் இருந்து வங்கிக்கு வட்டியாக செல்லக்கூடிய பணத்தின் அளவு அதிகரிக்கும்.

# 8000 தனியார் மருத்துவமனைகள் திறக்க தவெக அரசு பச்சைக்கொடி!

சென்னை மே. 22–

தமிழ்நாட்டில் மருத்துவ கட்டமைப்பை மேம்படுத்தும் வகையிலும், பொதுமக்களுக்கான மருத்துவ சேவைகளை எளிதாக்கும் வகையிலும் தமிழ்நாடு அரசு ஒரு மிக முக்கிய அதிரடி உத்தரவை பிறப்பித்துள்ளது. இதன்படி, மாநிலத்தில் புதிதாக 8,000 தனியார் மருத்துவம னைகளை திறப்பதற்கு தற்காலிக அனுமதி வழங்க தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

புதிய மருத்துவமனைகள் அமைக்க ஆன்லைன் மூலம் தேவையான தகவல்களை பதிவேற்றம் செய்தாலே தற்காலிக சான்றிதழை உடனே வழங்கவும், முழு ஆய்வுக்குப் பின்னர் நிரந்தர சான்றிதழ்கள் வழங்கவும் மருத்துத்துறை அமைச்சர் அருண்ராஜ் கூறியுள்ளார்.




புதிய மருத்துவமனைகளை தொடங்குவதற்கான நடை முறைகளை எளிமையாக்கும் பொருட்டு, ஆன்லைன் மூலம் தேவையான ஆவணங்கள் மற்றும் தகவல்களை பதிவேற்றம் செய்தாலே தற்காலிக சான்றிதழ் உடனடியாக வழங்கப்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் தேவையற்ற காலதாமதம் தவிர்க்கப்படும். அதே நேரத்தில், தற்காலிக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, மருத்துவத்துறையின் முறையான மற்றும் முழுமையான கள ஆய்வுக்கு பின்னரே அந்தந்த மருத்துவமனைகளுக்கு நிரந்தர சான்றிதழ்கள் வழங்கப்படும் என்றும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

அரசின் இந்த தற்காலிக அனுமதி உத்தரவு, தமிழகத்தின் குக்கிராமங்கள் மற்றும் புறநகர் பகுதிகளிலும் தனியார் மருத்துவ வசதிகள் தடையின்றி, மிக வேகமாக கிடைப்பதற்கு வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலையங்கம்
மதுரை மணி
வெள்ளிக்கிழமை 22.05.2026
விசுவாவசு தமிழ் வருடம்
வைகாசி மாதம் 08-ம் தேதி

## வீழ்வேன் என்று நினைத்தாயோ?



சில காலமாக டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு சரிந்து வந்தது அனைவரும் அறிந்ததே. இந்நிலையில் மே 21–ஆம் தேதி அன்று இந்திய ரூபாய், சரிவிலிருந்து மீண்டு 50 பைசா அதிகரித்து, 96.36 என்ற அளவை எட்டியுள்ளது. ரூபாய் மதிப்பு தொடர்ந்து அதிகரித்து வருவதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் கூறப்படுகிறது. ஏன் இந்த திடீர் மாற்றம்?: போர் பதற்றம் நிலவியதால் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணையின் விலை தொடர்ந்து அதிகரித்தது. இதனால் பெட்ரோல், டீசல் விலை அதிகரித்ததை பார்த்தோம். ஆனால் தற்போது இந்த அரசியல் பதற்றங்கள் சற்று குறைந்தது போல் தெரிவதால், கச்சா எண்ணெயின் விலையும் குறைந்துள்ளது. இதுவும் ரூபாயின் மதிப்பு அதிகரிக்க காரணமாகியுள்ளது.

பொதுவாக இந்தியாவில், உள்ளூர் உற்பத்தியைத் தாண்டி சில பொருட்கள் வெளியூரில் இருந்து தான் இறக்குமதி செய்யப்படுகிறது. அப்படி இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு நாம் டாலரில் பணம் செலுத்த வேண்டும். கச்சா எண்ணெய்யின் விலை தொடர்ந்து அதிகரித்தால் நாம் அதிக டாலர் கொடுத்து கச்சா எண்ணெய்யை வாங்க வேண்டி வரும். இதனால் ரூபாய்யின் மதிப்பு குறையும். அதாவது எங்கெங்கு டாலரின் தேவை அதிகமாகிறதோ? அப்பொழுதெல்லாம் ரூபாயின் மதிப்பு வீழ்ச்சியை எட்டும். கடந்த புதன்கிழமை அன்று இந்திய ரூபாய் மிக மிக மோசமான நிலைக்குச் சென்றது. ஒரு டாலரின் மதிப்பு 96.95 என்ற அளவை எட்டியது. அதன் பின்னர் மார்க்கெட் முடியும் நேரத்தில் மீண்டும் 96.86 பைசா என்ற அளவில் முடிவடைந்தது. பிறகு வியாழக்கிழமை வர்த்தக ஆரம்பிக்கும்போதே 96.25 என்ற அளவில் தொடங்கியது. ஒரு கட்டத்தில் 96.05 வரை எகிறியது. இடையில் 96.60 என்ற அளவை எட்டி, இறுதியில் 50 பைசா லாபத்துடன் 96.36–இல் முடிவடைந்தது.

எப்பொழுதெல்லாம் ரூபாயின் மதிப்பு அதள பாதாளத்திற்கு செல்கிறதோ? அப்பொழுதெல்லாம் ஆர்பிஐ தலையிட்டு சில விஷயங்களை செய்யும். அந்த வகையில் வட்டி விகிதங்களை அதிகரிக்கவும் ஆர்பிஐ பரிசீலித்து வருகிறது. இது முதலீடாளர்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்கா மற்றும் ஈரான் இடையேயான போர் காரணமாக ஏற்பட்ட பிரச்சனைகளுக்கு முற்று புள்ளி வைக்கும் வகையில், அமெரிக்கா அதிபர் ட்ரம்ப் அமைதி ஒப்பந்தம் இறுதி கட்டத்தை நெருங்கிவிட்டதாக கூறியுள்ளார். இது உலகெங்கிலும் பாசிட்டிவான அதிவலைகளை ஏற்படுத்தியுள்ளது.

## ராஜீவ்காந்தி நினைவு தினத்தையொட்டி தீவிரவாத எதிர்ப்பு உறுதிமொழி ஏற்பு!



திருப்பூர், மே. 22–

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் 35–ஆவது நினைவு தினத்தையொட்டி திருப்பூர் மாநகர் மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பாக நினைவஞ்சலி மற்றும் விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது.மாநகர் மாவட்டத் தலைவர் நல்லூர் கோபால்சாமி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மலர்களால் அலங்கரிக்கப்பட்ட ராஜீவ் காந்தியின் திருவுருவப் படம் தாங்கிய வாகன ஊர்தி நகரின் முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.ஊர்வலத்தின் போது, தொண்டர்கள் ராஜீவ் காந்தியின் புகழைப் போற்றியும், காங்கிரஸ் கட்சியின் சார்பிலும் முழக்கங்களை எழுப்பினர். தொடர்ந்து, அவரது சாதனை விளக்க நோட்டீஸ்கள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.நிகழ்வின் முக்கியப் பகுதியாக, கலந்துகொண்ட அனைவரும் தீவிரவாத எதிர்ப்பு உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர். நிகழ்ச்சியின் இறுதியில், காங்கிரஸ் நிர்வாகி என். ராமகிருஷ்ணன் நன்றியுரை ஆற்றினார். இதில் திரளான கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



பழனி மலை கோயிலுக்கு செல்போன் உள்ளிட்ட வீடியோ எடுக்கும் உபகரணங்கள் கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டிருக்கும் நிலையில் மனைவியை கையில் தூக்கி படி படிப்பாதையில் செல்லும் நபர் வீடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## பழனியில் நகைச்சுவை மன்றம் தொடக்க விழா!



பழனி மே 22–

பழனி அடிவாரம் வி பி எஸ் கிராண்ட் மஹாலில் பழனி நகைச்சுவை மன்றம் சார்பில் தொடக்க விழாவும் நகைச்சுவை சிந்தனை பட்டிமன்றமும் நடைபெற்றது.

இதற்கு பழனி நகைச்சுவை மன்ற தலைவர் ஏ சுந்தரம் தலைமை வகித்தார். செயலாளர் ஆடிட்டர் வி ஆனந்த சுப்பிரமணியன், பொருளாளர் பில்டிங் காண்ட்ராக்டர் பி நேரு, ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியை கந்த விலாஸ் அதிபர் என் செல்வகுமார் தொடங்கி வைத்தார். விழாவில் சிறப்பு விருந்தினராக வருமான வரித்துறை ஆணையர் வி நந்தகுமார், பழனி போலீஸ் டிஎஸ்பிஎஸ் தனஞ்செயன், வி பி எஸ் கிராண்ட் மஹால் அதிபர் பி பெரியசாமி, ஜவகர் காண்ட்ராக்டர் ஜே மனோகரன், ரெண ஸ்ரீ பொட்டிக் அதிபர் ஏ மூர்த்தி, நகர நிதி நிறுவன உரிமையாளர் சங்கத் தலைவர் எம் மகுடீஸ்வரன், காணியாளர் பன்னாடி ராஜா என்ற கந்தசாமி, நகைச்சுவை மன்ற நிர்வாகிகள் ஜெ சுரேஷ், பி பிரசன்னா, வி. மகாலிங்கம், பி சங்கராலயம் சிவக்குமார், எஸ் ஆர் எம் பாலாஜி, ஆகியோர் உட்பட ஏராளமானவர்கள் பங்கேற்றனர்.

முன்னதாக மனித குல மகிழ்ச்சிக்கு பெரிதும் காரணம் உறவுகளா ஊடகங்களா என்ற தலைப்பில் நகைச்சுவை பட்டிமன்றம் நடைபெற்றது. இதில் அண்ணா சிங்காரவேலு, திருச்சி அன்னலட்சுமி, ஆரூர் சினேகா, பழனி விருத்தாச்சலம், அருண் ஆகியோர் பங்கேற்றனர்.



திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், நடந்து முடிந்த 10 மற்றும் 12–ஆம் வகுப்புப் பொதுத்தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்ற அரசு மேல்நிலைப்பள்ளி மற்றும் அரசு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு பாரட்டுச்சான்றிதழ்களை மாவட்ட ஆட்சியர் க.சிவசௌந்திரவல்லி வழங்கிப் பாராட்டினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ஜெ.நாராயணன், முதன்மைக் கல்வி அலுவலர் திரு.இரா.புண்ணியகோட்டி, மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) திருமதி.சத்தியபிரபா, மாவட்டக்கல்வி அலுவலர் (தனியார்) திருமதி.நேசபிரபா மற்றும் பள்ளிகளின் அரசு மேல்நிலைப்பள்ளி மற்றும் அரசு உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

## ஏர்வாடி தர்கா கொடி இறக்க விழா!



ராமநாதபுரம், மே. 22–

ராமநாதபுரம் மாவட்டம் உலகப் புகழ்பெற்ற ஏர்வாடி தர்கா கொடி இறக்க விழாவில், சுமார் 9 ஆயிரம் கிலோ உணவு யாத்திரிகர்களுக்காக தயாரிக்கப்பட்டது.

இந்த பிரம்மாண்ட சமையல் பணியை சமையல்கலை நிபுணர் எஸ்.புஹாரி திறம்பட மேற்கொண்டார். யாத்திரிகர்களுக்கு தர்கா நிர்வாகத்தின் சார்பில் வழங்கப்பட்ட இந்த உணவு, சுவை மற்றும் தரத்தில் சிறப்பாக இருந்ததாக பலரும் பாராட்டு தெரிவித்துள்ளனர். குறிப்பாக, “இத்தனை பெரிய அளவில் சமைக்கப்பட்ட உணவு மிகவும் சுவையாக இருந்தது” என யாத்திரிகர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். அதனைத் தொடர்ந்து அவருக்கு நிர்வாகத்தின் சார்பாக பொன்னாடை அணிவித்து வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

சமையலில் அனுபவமும், சுவையில் தனித்துவமும் கொண்ட “சேகு தம்பி கேட்டரிங்” தற்போது கீழக்கரை மற்றும் சுற்றுவட்டார மக்களின் நம்பிக்கைக்குரிய கேட்டரிங் சேவையாக உருவெடுத்து வருகிறது.

## பழனியில் ராஜீவ் காந்தியின் நினைவு நாள் அஞ்சலி!



பழனி, மே 22–

பழனியில் ராஜீவ் காந்தியின் 35 வது ஆண்டு நினைவு நாள் அஞ்சலி செலுத்தி, உறுதிமொழி ஏற்ற போது, திண்டுக்கல் மேற்கு மாவட்ட தலைவர் சாமிநாதன் தலைமை வகித்தார். நகரத் தலைவர் முத்து விஜயன் முன்னிலை வகித்தார். முன்னாள் நகர்மன்ற உறுப்பினரும் மாவட்டத் துணைத் தலைவருமான, முருகானந்தம், முகமது அலி, நகர் மன்ற உறுப்பினர் பத்மினி முருகானந்தம், இளைஞர் அணி பாலகுமார், நேரு, ஆயக்குடி முத்துச்சாமி, பழனி நகர மகளிர் அணி தலைவி திவ்யபாரதி, மாநில உறுப்பினர் சாயிரா பானு, வட்டாரத் தலைவர்கள் பாலமுருகன் பாலசுப்பிரமணி சதீஷ் பகவான் கருப்புசாமி ராமராஜ் நகரத் தலைவர்கள் அக்கீம் காளிமுத்து pcc ரங்கமலை ராஜேந்திரன் தேர்வு தலைவர்கள் திருமலை சாமி ஜாபர்அலி செந்தில்குமார் லோகநாதன் கவிமணி வழக்கறிஞர் முருகானந்தம் சுரேஷ் மீரான் மாவட்டத் தலைவர்கள் பர்வேஸ் அகமது செந்தில்குமார் பாண்டி பிரேம்குமார் மற்றும் நிர்வாகிகள் கணேசன் நல்லு ஷேக் முகமது சரவணன் பாஸ்கரன் வீரக்குமார் லோகநாதன் பாண்டி குமரவேல் சாகுல் அமீது ஜெயக்குமார் கணபதி ஆசிரியர் சிவா மானுர்செல்லம் குணசேகரன் நேரு பழனிச்சாமி குழந்தைவேலு தேவஸ்தான சுப்பிரமணி விவசாய பிரிவு நம்பியார் நஸ்ருல் தேவி பிரியா கமலா மற்றும் பலர் கலந்து கொண்டனர் முடிவில் மேற்கு மண்டல தலைவர் வி. வீரமணி அவர்கள் நன்றி உரையாற்றினார்.

## வாணியம்பாடி அஇஅதிமுக மாவட்ட அலுவலகத்தில் ஆலோசனை கூட்டம்!



வாணியம்பாடி, மே. 22–

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அதிமுக மாவட்ட அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் டாக்டர் பசுபதி தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அதிமுக கழக பொதுச் செயலாளரும் முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி மாவட்டச் செயலாளர்கள் மாற்றம் செய்து புதிய மாவட்ட செயலாளர்கள் நியமனம் செய்து அறிக்கை விட்டார் அதன் அடிப்படையில் திருப்பத்தூர் மாவட்டத்திற்கு முன்னாள் மாவட்ட செயலாளர் கே சி.வீரமணி நீக்கி புதிய மாவட்ட செயலாளராக டாக்டர் பசுபதி நியமனம் செய்து உத்தரவு பிறப்பித்தார்.

அதனைத் தொடர்ந்து அதிமுக மாவட்ட கட்சி அலுவலகத்தில் மாவட்ட செயலாளராக பொறுப்பேற்றுக் கொண்ட டாக்டர். பசுபதி முன்னாள் முதலமைச்சர் எம்ஜிஆர், ஜெயலலிதா திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். அதன் தொடர்ச்சியாக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். கட்சி அலுவலகக் கூட்டரங்கில் மாவட்ட செயலாளர் டாக்டர் பசுபதி தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஒன்றிய செயலாளர்கள் பேரூர் கழக செயலாளர்கள் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர் கள் மற்றும் நகர செயலாளர் பல்வேறு அணியைச் சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் கழகத் தொண்டர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

உடன் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் கோ.வி. சம்பத்குமார், வாணியம்பாடி நகர செயலாளர் சதாசிவம், ஆம்பூர் நகர செயலாளர் மதியழகன், திருப்பத்தூர் ஜோலார்பேட்டை பேரூர் நகர ஒன்றிய செயலாளர்கள் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் பல்வேறு அணியை சேர்ந்த நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.


## அகில இந்திய கூடைப்பந்து போட்டி,சென்னை இந்தியன் வங்கி அணி சுழல் கோப்பை வென்றது!




தேனி, மே. 22–

அகில இந்திய கூடைப்பந்து போட்டி,சென்னை இந்தியன் வங்கி அணி சுழல் கோப்பை வென்றது தேனி மாவட்டம், பெரியகுளம் சில்வர் ஜூப்ளி ஸ்போர்ட்ஸ் கிளப் சார்பில் அமரர் பீ.டி சிதம்பர சூரிய நாராயணன் நினைவுச் சுழல் கோப்பைக்கான 65–ம் ஆண்டு அகில இந்திய கூடைப்பந்து போட்டி கடந்த 15ம் தேதி தொடங்கி லீக் மற்றும் நாக் அவுட் முறையில் நடைபெற்றது. இப்போட்டியில் இந்தியன் வங்கி சென்னை அணியும்,புதுடில்லி ஓ.எம். ஜி.சி அணிக்கு இடையே பரபரப்பாக நடைபெற்ற இறுதி போட்டியில் இந்தியன் வங்கி சென்னை அணி 84 க்கு 62 என்ற புள்ளி கணக்கில் வெற்றி 1–வது இடத்தை வென்று சுழல் கோப்பையை கைப்பற்றியது.

அதைத்தொடர்ந்து, ஓ.எம். ஜி.சி டெல்லி அணி 2–வது இடத்தையும், புதுடெல்லி விமானப்படை அணி 3–வது இடத்தையும், சென்னை விடுதி மாணவர் அணி 4–வது இடத்தையும் பெற்றனர்.கோப்பையை வென்ற இந்தியன் வங்கி சென்னை அணிக்கு பி.டி சிதம்பர சூரிய நாராயணன் நினைவு சுழல் கோப்பை மற்றும் ரூபாய் 50,000 ரொக்க பணத்தை சில்வர் ஜூப்ளி விளையாட்டுக் கழக தலைவர் சுவாமி நடேச ஆனந்த் சரஸ்வதி சுவாமிகள் தலைமை வகித்து பரிசு கோப்பை வழங்கினார். மேலும் போட்டிகளில் சிறப்பாக விளையாடி சிறந்த விளையாட்டு வீரராக தேர்வான இந்தியன் வங்கி அணியை சேர்ந்த தணேஸ்வருக்கு ஹீரோ ஸ்ப்ளெண்டர் பைக் சிறப்பு விருந்தினர் தேனி அருண் மோட்டார்ஸ் நிறுவனர் பாண்டியன் பரிசாக வழங்கி வாழ்த்துக்கள் தெரிவித்தார். இவ் விளையாட்டுப் போட்டிக்கான ஏற்பாடுகளை விளையாட்டு கழக செயலாளர் சிதம்பர சூரிய வேலு மற்றும் குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.



## பணத்தை சேமிக்க விரும்பும் நபர்களின் பிறந்த தேதிகள்!



எண் கணிதத்தில் ரேடிக்ஸ் எண் எனப்படுவது தனி நபரின் பிறந்த தேதியின் கூட்டுத்தொகையில் இருந்து பெறப்படும் தனித்துவமான எண் ஆகும். எண்ணுக்கு உரியவரின் குணாதிசயங்களை பிரதிபலிக்கும் இந்த எண்கள், அவர்களின் நிதி ரீதியான திட்டங்களை கணிக்கவும் உதவியாக இருக்கிறது. அந்த வரிசையில், நிதி சார்ந்த விஷயங்களில் சிறப்பாக செயல்படும் நபர்கள் யார்? இவர்களின் பிறந்த தேதி என்னவாக இருக்கும்? என்பதையும் எண் கணித முறையில் கணிக்க இயலும் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்!

**ரேடிக்ஸ் எண் 1 (1, 10, 19, 28 ஆகிய தேதிகளில் பிறந்தவர்கள்)**

எண் கணிதத்தில் எண் 1 ஆனது சூரியனுடன் தொடர்பு கொண்டுள்ளது. ஆளுமை பண்புகள், தலைமைப்பண்பு கொண்ட ஒரு எண்ணாகவும் இது பார்க்கப்படுகிறது. ராஜதந்திரிகள், சிறப்பான செயல் திட்டம் தீட்டுவதில் வல்லவர்கள்.

குறிப்பாக, மண விஷயத்தில் இவர்கள் எடுக்கும் முடிவுகள், தெளிவாகவும் – தீர்க்கமாகவும் இருக்கும், எதிர்பார்த்த நற்செய்திகளையும் கொண்டு வந்த தரும். ஆதிக்கம் செலுத்த விரும்பும் இவ்ரகள், எந்த விஷயத்தையும் எளிதில் விட்டுக்கொடுப்பது இல்லை. தங்கள் விடா முயற்சியின் மூலம் முன்னுக்கு வருவதோடு, தங்கள் உழைப்புக்கான பலனையும் பெறுகிறார்கள்.

தங்கள் துறையில் முதன்மை இடத்தை பிடிக்கும் இவர்கள், பொருளாதார ரீதியாகவும் சிறப்பாக செயல்படுகிறார்கள். நிபுணர்கள் கூற்றுப்படி இவர்களிடம் பணப் பற்றாக்குறை மிகவும் அரிதான சமயங்களிலேயே காணப்படும்.

**எண் 3 (3, 12, 21, 30 ஆகிய தேதிகளில் பிறந்தவர்கள்)**

ரேடிக்ஸ் எண் 3 கொண்டவர்கள் அடிப்படையில் படைப்பாற்றல் நிறைந்தவர்கள். குரு பகவானை அதிபதியாக கொண்ட இந்த ரேடிக்ஸ் எண் 3, சரியான நேரத்தில் சரியான முடிவுகளை எடுக்கும் திறமைசாலிகள். தங்கள் எதிர்காலம் தொடர்பான தெளிவான திட்டம் ஒன்றை வைத்திருக்கும் இவர்களுக்கு, அதிர்ஷ்டமும் – அதிர்ஷ்டத்துடன் கடின உழைப்பும் கைகொடுக்கும்.

தங்கள் தொழில் வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையில் எதிர்பார்த்த திருப்பங்களை கொண்டு வரும் வாய்ப்பும் இவர்களிடம் காணப்படுகிறது. பொருளாதார நிலை குறித்து பேசுகையில், அவர்களின் தெளிவான முடிவுகள் மூலம் வருமானத்தை பலமடங்காக பெருக்குவார்கள். லட்சுமி தேவியின் ஆசிர்வாதமும் இவர்களுக்கு கைகொடுக்கும்.

**எண் 5 (5, 14, 23 ஆகிய தேதிகளில் பிறந்தவர்கள்)**

எண் கணித நிபுணர்கள் கூற்றுப்படி ரேடிக்ஸ் எண் 5 கொண்டவர்கள், துணிச்சலான முடிவுகளை எடுக்கும் பண்பு கொண்டவர்கள். புதிய விஷயங்களை கற்பதிலும், அதற்கான பயணங்களை மேற்கொள்வதிலும் ஆர்வம் கொண்டவர்கள். நாளுக்கு நாள் மாற்றம் கண்டு வரும் நவநாகரீக உலகில், தங்களை தேவைக்கு ஏற்றார் போல் மாற்றிக் கொள்வது எப்படி? என நன்று அறிந்தவர்கள்.

தொழில் வாழ்க்கை குறித்து பேசுகையில், தெளிவான முடிவுகள் மூலம் சிறப்பான முடிவுகளை எடுப்பார்கள். அவர்களின் முடிவுகள், அவர்களை சார்ந்து இருப்பவர்களின் வெற்றிக்கும் உதவியாக இருக்கும். தங்களுக்கு கிடைக்கும் வருமானம் அளவில் சிறியதாக இருப்பினும், அதனை முறையாக பயன்படுத்தி, பொருளாதார நிலையை மேம்படுத்தும் பக்குவம் கொண்டவர்கள்!

**எண் 6 (6, 15, 24 ஆகிய தேதிகளில் பிறந்தவர்கள்)**

எண் 6, சுக்கிரனை அதிபதியாக கொண்ட ஒரு எண் ஆகும். தனி நபரின் வாழ்க்கையில் அன்பு, அழகு, காதல், தோரணை போன்றவற்றை பிரதிபலிக்கும் ஒரு கிரகமாக சுக்கிரன் பார்க்கப்படுகிறார்.

சுக்கிரன் கிரகத்துடன் தொடர்பு கொண்ட இந்த எண்ணும், இத்தகைய குணங்களையே பிரதிபலக்கிறது. பணம், புகழ் இரண்டையும் பெறும் திறமை பெற்ற இவர்கள், பண விஷயத்தில் சுட்டியாக இருப்பார்கள்.

தொழில் வளர்ச்சி தொடர்பான முடிவுகளை எடுக்கும் முன்னர், ஒன்றுக்கு பல முறை சிந்தித்து செயல்படுவார்கள். பணம் சார்ந்த விஷயங்களில் அவர்கள் எடுக்கும் முடிவுகள், அனைவருக்கும் நற்பலன்களை கொண்டு வரும். குறிப்பாக, அவர்களின் குடும்ப உறவுகளுக்கும் சாதகமான ஒரு காலத்தை கொண்டு வரும்.

**எண் 8 (8, 17, 26 ஆகிய தேதிகளில் பிறந்தவர்கள்)**

சனி பகவானுடன் தொடர்பு கொண்ட ஒரு எண்ணாக இந்த எண் 8 பார்க்கப்படுகிறது. கடின உழைப்பும், அர்ப்பணிப்பும் இவர்களிடம் காணப்படும் ஆக்கப்பூர்வமான குணம் ஆகும். தங்கள் வாழ்க்கையின் ஆரம்ப காலத்தில் – போராட்டம் நிறைந்த வாழ்க்கை அனுபவித்த இவர்கள், இந்த சவால்கள் வழியே வாழ்க்கை பாடங்களை கற்றனர்.

வாழ்க்கையில் தான் கற்ற பாடங்களை பயன்படுத்தி, வியாபாரத்தில் அந்த யுக்திகளை பயன்படுத்தி, எதிர்பார்த்த திருப்பத்தை தங்கள் வாழ்க்கையில் கொண்டு வருகின்றனர். குறிப்பாக, பண விஷயத்தில் இவர்களின் முடிவுகள், எதிர்பார்த்த உயரத்திற்கு அவர்களை அழைத்துச்செல்லும். லட்சுமி தேவியின் ஆசியால், இவர்கள் பண கஷ்டம் இன்றி வாழும் வாய்ப்புகள் அதிகம்!

நலம் நலமறிய..!

மருத்துவ குறிப்புகள்



## அழகு ஊசிகளால் ஆபத்து: எச்சரிக்கை..!



இந்தியாவின் வேகமாக வளர்ந்து வரும் அழகு மற்றும் ஒப்பனை சிகிச்சைத் துறை, ஒப்பனைப் பொருட்களை மனித உடலில் ஊசி மூலம் செலுத்துவது சட்டப்படி அனுமதிக்கப்படாது என்று மத்திய மருந்து தரக்கட்டுப்பாட்டு அமைப்பு (CDSCO) எச்சரித்துள்ளது. பாதுகாப்பு, தவறான கூற்றுகள் மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத ஒப்பனை நடைமுறைகள் குறித்த கவலைகள் அதிகரித்து வரும் நிலையில், இந்த நடவடிக்கை குளுடாதையோன் சொட்டு மருந்துகள், சருமத்தை வெண்மையாக்கும் ஊசிகள் மற்றும் முதுமையைத் தடுக்கும் ஊசிகளைத் தீவிர ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில், "விரைவான தீர்வு" தரும் அழகு சிகிச்சைகளை வழங்கும் ஒப்பனை மையங்கள் இந்திய நகரங்கள் முழுவதும் பெருகி வருகின்றன. போடோக்ஸ் விருந்துகள் மற்றும் முதுமையைத் தடுக்கும் ஊசிகள் முதல், பளபளப்பான சருமத்திற்காக சந்தைப்படுத்தப்படும் குளுடாதையோன் நரம்பு வழி சொட்டு மருந்துகள் வரை, பல ஒப்பனை நடைமுறைகள் பிரபலங்களின் விளம்பரங்கள் மற்றும் வைரலான சமூக ஊடகப் போக்குகள் மூலம் பிரபலமடைந்துள்ளன. இருப்பினும், இந்த சிகிச்சைகளுடன் தொடர்புடைய மருத்துவ அபாயங்கள் குறித்து நுகர்வோர் பெரும்பாலும் அறிந்திருப்பதில்லை என்று சுகாதார வல்லுநர்கள் கூறுகின்றனர்.

**CDSCO-வின் விளக்கம் என்ன சொல்கிறது?**

தனது சமீபத்திய விளக்கத்தில், 1940-ஆம் ஆண்டின் மருந்துகள் மற்றும் ஒப்பனைப் பொருட்கள் சட்டத்தின் கீழ் உள்ள ஒப்பனைப் பொருட்கள் வெளிப்புறப் பயன்பாட்டிற்கு மட்டுமே உரியவை என்று CDSCO கூறியுள்ளது. தோலில் தேய்க்க, ஊற்ற, தெளிக்க அல்லது பூச உத்தேசிக்கப்பட்ட தயாரிப்புகளை சட்டப்படி ஊசி மூலம் செலுத்த முடியாது. அழகு மேம்பாடு, சரும வெண்மை, நச்சு நீக்கம் அல்லது முதுமை எதிர்ப்பு விளைவுகள் தொடர்பான தவறான அல்லது ஏமாற்றும் கூற்றுகளை விளம்பரப்படுத்துவதற்கு எதிராக ஒழுங்குமுறை ஆணையம் மருத்துவமனைகளை எச்சரித்துள்ளது. அழகுசாதனப் பொருட்கள் சிகிச்சை நோக்கங்களுக்காக அல்ல என்றும், அவை சிகிச்சை தலையீடுகளாகப் பயன்படுத்தப்படக் கூடாது என்றும் அந்த உத்தரவு மேலும் வலியுறுத்தியது.

**குளுடாதையோன் ஊசிகள் ஏன் சர்ச்சைக்குரியவை?**

இந்தியாவில் மிகவும் விரும்பப்படும் சரும நிறத்தை வெண்மையாக்கும் சிகிச்சைகளில் ஒன்றாக மாறியுள்ள குளுடாதையோன் ஊசிகளுக்கு இந்த எச்சரிக்கை குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்தது. குளுடாதையோன் என்பது உடலால் இயற்கையாக உற்பத்தி செய்யப்படும் ஒரு ஆன்டிஆக்ஸிடன்ட் ஆகும், ஆனால் ஊசி மூலம் செலுத்தப்படும் அதன் வகைகள், ஆரோக்கிய மையங்கள் மற்றும் அழகு நிலையங்களில் பொலிவான சருமம் மற்றும் முதுமை எதிர்ப்புப் பலன்களுக்கான அதிசய சிகிச்சைகளாக அடிக்கடி விளம்பரப்படுத்தப்படுகின்றன.

இருப்பினும், மருத்துவ வல்லுநர்கள் இந்தக் கூற்றுகளின் பாதுகாப்பு மற்றும் அறிவியல் ஆதாரங்கள் இரண்டையும் மீண்டும் மீண்டும் கேள்விக்குள்ளாக்கியுள்ளனர். பல ஊசி மூலம் செலுத்தப்படும் அழகுசாதன சிகிச்சைகள் பகுத்தறிவற்ற முறையிலும், சில சமயங்களில் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ வழிகாட்டுதல்களுக்கு வெளியேயும் பயன்படுத்தப்படுகின்றன என்று தோல் மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர்.

போதுமான மருத்துவ மேற்பார்வையின்றி செய்யப்படும் அழகுசாதனப் பொருட்கள், பரிந்துரைக்கப்பட்ட மருந்துகள் மற்றும் அழகு சிகிச்சைகள் ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்பு குறித்துக் கவலை அதிகரித்து வருகிறது என்று தோல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்..

**அழகு ஊசிகளுடன் தொடர்புடைய சுகாதார அபாயங்கள்**

கட்டுப்பாடற்ற அழகு ஊசிகள் கடுமையான உடல்நலச் சிக்கல்களுக்கு வழிவகுக்கும் என்று மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர். பக்க விளைவுகள் கடுமையான ஒவ்வாமை எதிர்வினைகள், தோல் தொற்றுகள், நரம்பு பாதிப்பு, சிறுநீரகம் மற்றும் கல்லீரல் சிக்கல்கள், இரத்த நாள அடைப்பு மற்றும் நீண்டகால தோல் பிரச்சனைகள் ஆகியவை அடங்கும்.

முறையான அவசர சிகிச்சை வசதிகள் இல்லாத அழகு நிலையங்கள் அல்லது சிறிய மருத்துவமனைகளில் சிகிச்சைகள் மேற்கொள்ளப்படும்போது அபாயங்கள் இன்னும் அதிகமாகின்றன என்று நிபுணர்கள் கூறுகின்றனர். நோயாளிகளுக்குச் சரியாக என்ன செலுத்தப்படுகிறது என்பது குறித்த வெளிப்படைத்தன்மை இல்லாதது மற்றொரு முக்கிய கவலையாகும்.

சில மருத்துவமனைகள், அதில் உள்ள பொருட்கள், மருந்தளவு அல்லது அறிவியல் ரீதியான ஒப்புதலைத் தெளிவாக வெளியிடாமல், "முதுமையைத் தடுக்கும் கலவைகள்" அல்லது "சருமத்தைப் பொலிவாக்கும் ஊக்கிகள்" என்று சந்தைப்படுத்துகின்றன. உடனடி அழகுத் தீர்வுகள் அல்லது "பிரபலங்களால் அங்கீகரிக்கப்பட்ட" சிகிச்சைகள் என விளம்பரப்படுத்தப்படும் சிகிச்சைகள் குறித்து நுகர்வோர் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்

பயிற்சி பெற்ற நிபுணர்களால் செய்யப்பட்டாலும் கூட, ஊசி மூலம் செலுத்தப்படும் எந்தவொரு அழகு சிகிச்சையும் முற்றிலும் அபாயமற்றது அல்ல என்று மருத்துவர்கள் வலியுறுத்துகின்றனர். எந்தவொரு அழகு சிகிச்சையையும் மேற்கொள்வதற்கு முன்பு, நோயாளிகள் தகுதிவாய்ந்த தோல் மருத்துவர்கள் அல்லது உரிமம் பெற்ற மருத்துவ நிபுணர்களை அணுகி, அந்தத் தயாரிப்பு ஊசி மூலம் செலுத்துவதற்கான ஒழுங்குமுறை ஒப்புதலைப் பெற்றுள்ளதா என்று கேட்க வேண்டும்.

நிரந்தர சரும வெண்மை, உடனடி முதுமைத் தடுப்பு விளைவுகள் அல்லது அறிவியல் ரீதியான ஆதாரம் இல்லாத "நச்சு நீக்கம்" போன்ற நம்பத்தகாத வாக்குறுதிகளை அளிக்கும் மருத்துவமனைகளைத் தவிர்க்குமாறும் சுகாதார நிபுணர்கள் மக்களுக்கு அறிவுறுத்துகின்றனர்.

CDSCO-வின் சமீபத்திய நடவடிக்கை, முதுமையைத் தடுக்கும் சிகிச்சைகளையும் குறைபாடற்ற சருமத்தையும் நாடும் இளம் நுகர்வோர் மத்தியில் வேகமாக விரிவடைந்துள்ள இந்தியாவின் அழகுசாதன மருத்துவச் சந்தையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். அழகுசாதனப் பொருட்களைப் பயன்படுத்தி சிகிச்சை அல்லது மருத்துவ ரீதியான கூற்றுகளை முன்வைக்கும் மருத்துவ நிலையங்கள், இனி அழகுசாதன விதிகள், 2020-இன் கீழ் ஒழுங்குமுறை நடவடிக்கையை எதிர்கொள்ளக்கூடும் என்று சட்ட வல்லுநர்கள் கூறுகின்றனர். பாதுகாப்பற்ற அழகுசாதனப் பயன்பாட்டு முறைகளிலிருந்து நுகர்வோரைப் பாதுகாப்பதற்கான ஒரு முக்கியப் படியாக இந்தத் தீவிர நடவடிக்கை இருக்கும் என்று நிபுணர்கள் நம்புகின்றனர்.

# அமெரிக்கா - ஈரான் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம்: போர் முடிவுக்கு வருமா?



ஈரான், மே. 22–

ஈரான் மீது கடந்த பிப்ரவரி 28-ந் தேதி அமெரிக்காவும், இஸ்ரேலும் தாக்குதலை தொடங்கின. பாகிஸ்தான் தலையீட்டில் சிறிது காலம் போர் நிறுத்தம் ஏற்பட்டது. அமெரிக்கா–ஈரான் இடையே சமரசம் செய்து வைக்க பாகிஸ் தான் உள்ளிட்ட நாடுகள் தொடர்ந்து முயன்று வருகின்றன. பாகிஸ்தானும், கத்தாரும் இணைந்து திருத்தப்பட்ட அமைதி திட்டத்தை தயாரித்துள்ளன.

அதுகுறித்து ஆலோசனை நடந்து வருகிறது. ஈரானின் 14 அம்ச திட்டம் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடந்து வருவதாக ஈரான் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. ஈரான் ஒப்பந்தத்தை ஏற்காவிட்டால் அந்த நாடு முற்றிலும் அழிக்கப்படும் என்று டிரம்ப் எச்சரித்து வருகிறார். அதேநேரத்தில் யுரேனியத்தை அமெரிக்கா விடம் வழங்கும் பேச்சுக்கே இடமில்லை. எதற்கும் தயாராக இருக்கிறோம் என்று ஈரான் கூறி வருகிறது.

இதனால், இருநாடுகளுக்கும் இடையே மீண்டும் போர் தீவிரம் அடையலாக்கூடும் என்ற கவலை சர்வதேச அளவில் அதிகரித்துள்ள நிலையில், அமெரிக்கா – ஈரான் அமைதிப் பேச்சு வார்த்தையில் முன்னேற்றம் அடைந்துள்ளதாக தற்போது புதிய தகவல் வெளியாகி யுள்ளது. மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான வரைவு ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது. எனினும், ஈரானின் ஹார்முஸ் நீரிணை மீதான கட்டுப்பாடு, யுரேனியம் செறிவூட்டல் ஆகிய விவகாரங்கள் தொடர்ந்து இழுபறியில் உள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்த பிரச்சினைக்கு முடிவு எட்டப்பட்டால் போர் நிறுத்தம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தவெகவிடம் அமைச்சரவையில் இடம் கேட்கப்பட்டதா? எஸ்.பி வேலுமணி தரப்பு விளக்கம்!



சென்னை, மே 22–

செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த எஸ்பி வேலுமணி கூறியதாவது;

இப்போதும் எங்களுக்கு எடப்பாடி பழனிசாமிதான் பொதுச்செயலாளர். பதவிக்காக ஒரு பிரிவாக செயல்படுகிறோம் என்பதை ஏற்க முடியாது. முதல் அமைச்சர் விஜய் எங்களை சந்தித்த போது சில கோரிக்கைகளை முன்வைத்துள்ளோம். அரசு பள்ளி மாணவர்களுக்கான 7.5 சதவீத உள்ஒதுக்கீட்டை 10 ஆக உயர்த்த கோரிக்கை வைத்துள்ளோம். தவெகவிடம் அமைச்சரவையில் இடம் கேட்கவில்லை. எங்கள் மீது அவதூறு பரப்புவதை டீம் வொர்க்காக செய்கிறாகள். தவெக அமைச்சரவையில் இடம்பெறுவதாக நாங்கள் கூறவில்லை. தவெகவும் இதனை தெரிவித்துள்ளது. தவெகவுக்கு மக்கள் ஆதரவு அளித்ததால் அவர்களுக்கு நாங்கள் ஆதரவு அளித்தோம். திமுக எதிர்ப்பில் தவெகவும் நாங்களும் ஒரே நேர்க்கோட்டில் இருந்ததால் ஆதரவளித்தோம். அதிமுகவில் பிளவு இல்லை. சிறிய கருத்து வேறுபாடுதான். எங்களை பற்றி தவறாக எழுதி பெரும் குழப்பத்தை சிலர் விளைவிக்கிறார்கள். கட்சியை உடைக்கும் எண்ணம் இல்லை. ஜெயலலிதா ஆட்சி அமைய வேண்டும் என்பதே எண்ணம்'' என்றார்.

# முதல்-அமைச்சருக்கு உதவ இரு ஆலோசகர்கள் நியமனம்?

சென்னை, மே. 22–

முதல்–அமைச்சர் விஜய்க்கு உதவ இரு ஆலோசகர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி த.வெ.க. கட்சியின் வியூக வகுப்பாளராக செயல்பட்டு வந்த ஜான் ஆரோக்கியசாமி முதல்–அமைச்சரின் அரசியல் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளதாகவும், பொது விவகாரங்களுக்கு விஷ்ணு ரெட்டி என்பவர் முதல்–அமைச்சரின் ஆலோசகராக நியமனம் செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. விஷ்ணு ரெட்டி என்பவர் முதல்–அமைச்சர் விஜய்யின் நெருங்கிய நண்பராக அறியப்படுகிறார்.

# நண்பருக்கு அரசு பதவி: முதல்மைச்சர் விஜய்க்கு உதவ இரு ஆலோசகர்கள் நியமனம்..!



சென்னை, மே. 22–

மாநில முதல்வருக்கு ஆலேசானை வழங்க, தலைமைச்செயலாளர் உள்பட ஏராளமான ஐஏஎஸ் அதிகாரிகள் உள்ள நிலையில், தனது தவெக கட்சியின் வியூக வகுப்பாளராக செயல்பட்டு வந்த ஜான் ஆரோக்கியசாமி முதலமைச்சரின் அரசியல் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார். அதுபோல, பொது விவகாரங்கள் ஆலோசகராக விஷ்ணு ரெட்டி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

# கருணாநிதி குடும்பத்தில் இருந்து த.வெ.க.வில் இணையும் பெண் பிரபலம்!



சென்னை, மே. 22–

மறைந்த முன்னாள் தி.மு.க. தலைவரும், முதல்–அமைச்சருமான கருணாநிதியின் குடும்பத்தில் இருந்து, ஒருவர் வந்து கலந்துகொண்டது பரபரப்பாக பேசப்பட்டது. மேலும், விரைவில் அவர் த.வெ.க.வில் இணையப்போவதாகவும் கூறப்பட்டது. ஏற்கனவே, மு.க.அழகிரியின் கோட்டையாக மதுரை விளங்கிவந்தது. ஒரு கட்டத்தில், அவருடைய ஆதரவாளர்கள் பலர் மு.க.ஸ்டாலின் பக்கம் திரும்பிவந்தனர். தற்போது, அரசியலைவிட்டே மு.க.அழகிரி ஒதுங்கி இருக்கும் நிலையில், அவருடைய மகள் கயல்விழி த.வெ.க.வில் இணைந்து, அரசியல் செல்வாக்கை மீட்க திட்டமிட்டிருப்பதாக கூறப்படுகிறது.

அந்த வகையில், உள்ளாட்சித் தேர்தலை கருத்தில் கொண்ட கயல்விழி செயல்படுவதாக சொல்லப்படுகிறது. மதுரை மாநகராட்சியின் மேயர் பதவியை அவர் குறிவைத்திருப்பதாகவும் அரசியல் வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்படுகிறது. கருணாநிதியின் குடும்பத்தில் இருந்து த.வெ.க.வுக்கு கிடைக்கப்போகும் இந்த நேரடி ஆதரவு தி.மு.க. தலைமைக்கு புதிய தலைவலியை ஏற்படுத்தியுள்ளது.


# குழந்தைகள் வைத்து பிரச்சாரம்! தவெக, தேர்தல் ஆணையத்துக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு!!



சென்னை, மே.22–

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில், தவெக தலைவர் விஜய் குழந்தைகள் மூலமாக பிரசாரம் செய்ததாக தொடரப்பட்ட வழக்கில் தேர்தல் ஆணையம் விளக்கம் அளிக்க சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதேபோன்று பணப்பட்டுவாடா செய்ததாக வந்த குற்றச்சாட்டுகள் பற்றி விளக்கம் அளிக்க திமுக, அதிமுக மற்றும் தவெகவுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

# திண்டுக்கல்லில் பள்ளி வாகனங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்த மாவட்ட ஆட்சியர்!




திண்டுக்கல், மே. 22–

திண்டுக்கல் வட்டார போக்குவரத்து அலுவலக மைதானத்தில் தனியார் பள்ளி வாகனங்களை மாவட்ட ஆட்சியர் சரவணன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது வேகக்கட்டுப்பாடு, அவசரகால வழிகள், தீயணைப்பு கருவிகள் மற்றும் முதலுதவி பெட்டிகள் வேகக்கட்டுப்பாட்டுக் கருவிகள் (Speed Governors), சிசிடிவி கேமராக்கள் மற்றும் படிக்கட்டுகள் உள்ளிட்டவை முறையாக இருக்கிறதா என பார்வையிட்டார். அனைத்து வாகனங்களிலும் தீயணைப்பு சிலிண்டர் (Fire Extinguisher) மற்றும் முதலுதவி பெட்டி இருப்பதை உறுதி செய்தார்.

தீ விபத்துகள் ஏற்பட்டால் எவ்வாறு அவற்றை கட்டுப்படுத்துவது என்று தீயணைப்பு வீரர்கள் செயல் விளக்கம் அளித்தனர்.

# லஞ்சம் வாங்கிய நிலப்பத்திர பதிவாளர் கைது!



ராமநாதபுரம், மே. 22–

ராமநாதபுரம் வெளிப்பட்டனம் பத்திர பதிவு அலுவலகத்தில் 2.44 ஏக்கர் நிலம் பத்திரம் பதிவு செய்ய வந்துள்ளார். அந்த நபரிடம் 50 லட்சம் பணம் தர வேண்டும் என பதிவாளர் ராமநாதன் கூறியதுடன் அவரது ஏஜெண்டாக செயல்பட்டு வந்த ஆயூப்கான் மூலம் முதல் கட்டமாக 25 லட்சம் பணம் பெற்றுக் கொண்டுள்ளார். இதன் பின்னர் மீதமுள்ள பணம் தந்தால் தான் பத்திரம் பதிவு செய்யப்படும் என பதிவாளர் ராமநாதன் கட்டாய படுத்திய நிலையில் அந்த நபர் லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிக்கு புகார் அளிக்கப்பட்டது. லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் ஆலோசனையின் பேரில் பதிவாளர் ராமநாதனிடம் ரூ 3 லட்சம் கொடுக்கும் போது மறைந்திருந்த லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் கைது செய்தனர். இதற்கு உடந்தையாக இருந்த ஏஜண்ட் ஆயூப் கான் கைது செய்து தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். பதிவாளர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் பத்திர பதிவு செய்வது நிறுத்தப்பட்டது.

## அறிவிப்பு

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி தாலுகா,மொட்டனூத்து பஞ்சாயத்து ஆசாரிபட்டி கிராமம் நடுத்தெருவில் வசிக்கும் சோனைமுத்து மகன் ராமர் பெயரில் ஆண்டிபட்டி சார்பு பத்திரபதிவு அலுவலகம் ஆவண எண் 1940/1982ஆம் ஆண்டு பதியபட்ட அசல் பத்திரம், தேனி பஸ் நிலையத்தில் தவறிவிட்டது. அக்கம்பக்கம் விசாரித்தும் தேடி பார்த்தும் பத்திரம் கிடைக்கவில்லை. இதுகுறித்து தகவல் உள்ளவர்கள் கீழ்கண்ட விலாசத்திற்கு தெரிவிக்கும்படி கேட்டுகொள்ளபடுகிறது.

இடம்: ஆண்டிபட்டி — தேதி, 22.05.2026

இவன்
**நடராசன்** S/o பரமன்,
நடுத்தெரு, ஆசாரிபட்டி,
மொட்டனூத்து (PO), ஆண்டிபட்டி தாலுகா.
cell:75581 03292.

# வேலை வாய்ப்பு

## தமிழ்நாடு மாநில உச்ச கூட்டுறவு வங்கி லிமிடெட் வேலைவாய்ப்புகள்!

**TN Cooperative Bank Recruitment 2026**

- Vacancy: 05
- Post Name: Cooperative Intern
- Qualification: MBA
- Selection Process: Merit List, Interview

நிறுவனத்தின் பெயர்: தமிழ்நாடு மாநில உச்ச கூட்டுறவு வங்கி லிமிடெட்.

பணி வகை: தமிழ்நாடு அரசுப் பணிகள்

வேலைவாய்ப்பு வகை: தற்காலிகம்

கால அளவு: 1 வருடம் (நீட்டிக்கப்படலாம்)

மொத்த காலியிடங்களின் எண்ணிக்கை: 05 கூட்டுறவுப் பயிற்சிப் பணியிடங்கள்

பணியிடங்கள்: ஈரோடு, காஞ்சிபுரம், மதுரை, நீலகிரி மற்றும் தஞ்சாவூர்

தொடங்கும் தேதி: 19.05.2026

கடைசி தேதி: 31.05.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.acstitnsc.in/

## சினிமா துளிகள்..!

# விநாயகர் சதுர்த்தியை டார்கெட் செய்யும் 'ஜெயிலர்2'



இயக்குநர் நெல்சன்– நடிகர் ரஜினிகாந்த் கூட்டணியில் உருவாகி வரும் படம் 'ஜெயிலர்2'. சென்னை, கேரளா, கோவா மற்றும் மைசூர் போன்ற இடங்களில் முதற்கட்ட படப்பிடிப்பு ஏற்கனவே முடிந்துவிட்டது.

'ஜெயிலர்' முதல் பாகத்தில் நடித்தவர்களே இரண்டாம் பாகத்திலும் நடிப்பதாக கூறினாலும், ரஜினிகாந்த், ரம்யா கிருஷ்ணன், மோகன் லால் மற்றும் சிவராஜ்குமார் தவிர்த்து எஸ்.ஜே.சூர்யா, விஜய் சேதுபதி, வித்யா பாலன், மிதுன் சக்ரவர்த்தி உள்ளிட்ட புது நடிகர்களும் நடித்து உள்ளனர்.

சன் பிக்சர்ஸ் தயாரிக்கும் இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். இதனிடையே, 'ஜெயிலர் 2' படம் இந்த ஆண்டு ஜூன் மாதம் 12–ந்தேதி வெளியாகும் என முன்னதாக தகவல் வெளியாகி இருந்தது.

இந்த நிலையில், 'ஜெயிலர்2' படம் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு செப்டம்பர் மாதம் 10 அல்லது 11–ஆம் தேதிகளில் வெளியாகும் என தகவல் வெளியாகி உள்ளது.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881

திருமலை எண்ணெய்ப் பலகாரம்
2331731
4377877
தமிழ் நாட்டு வகை காரம் & இனிப்பு
மற்றும் வட மாநில இனிப்பு
தயாரிப்பு & விற்பனை நிலையம்
92, திருப்பரங்குன்றம் சாலை மற்றும் கிளைகள்

# நான்கரை மணி நேரம் நடந்த அமைச்சரவை கூட்டம்; பிரதமர் மோடி போட்ட அதிரடி உத்தரவு!



புதுடில்லி, மே. 22–

முக்கிய துறைகளின் அமைச்சர்களுடன் சுமார் நான்கரை மணி நேரமாக நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் பிரதமர் மோடி அதிரடியான உத்தரவுகளை பிறப்பித்துள்ளார்.

5 நாடுகளின் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய பிரதமர் மோடி, விவசாயம், வனம், தொழிலாளர் நலன், சாலைப் போக்குவரத்து, கார்ப்பரேட் விவகாரங்கள், வெளியுறவுத்துறை, வர்த்தகம் மற்றும் மின்சாரம் உள்ளிட்ட முக்கிய துறைகளின் அமைச்சர்களுடன் முக்கிய ஆலோசனை நடத்தினார். அப்போது அனைத்து அமைச்சகங்களும் தங்களின் துறை செயல்பாடு குறித்த விரிவான அறிக்கையை சமர்பித்தன.

இந்த கூட்டத்தில், அனைத்து அமைச்சகங்கள் மற்றும் துறைகளில் நிர்வாக சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை பிரதமர் மோடி எடுத்துரைத்தார். மேலும், நிர்வாகம் என்பது முற்றிலும் பொது நலன் மற்றும் மக்களின் வசதியை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு செயல்பட வேண்டும் என்று கண்டிப்பாக கூறினார்.

அரசு செயல்பாடுகளில் கூடுதல் செயல்திறன் இருக்க வேண்டும் என்று கூறிய பிரதமர் மோடி, கோப்புகள் விரைவாக நகர்வதையும், தேவையற்ற நடைமுறை தாமதங்களை தவிர்ப்பதையும் உறுதி செய்யுமாறு அமைச்சகங்களுக்கு உத்தரவிட்டார். 2047க்குள் இந்தியாவை ஒரு வளர்ந்த நாடாக மாற்றுவதற்கு அமைச்சர்கள் ஒரு குறிப்பிட்ட லட்சியத்தோடு பணியாற்ற வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

கடந்த 12 ஆண்டுகளில் அரசின் சாதனைகளை அமைச்சர்கள் மக்களிடம் கொண்டு சேர்த்து, அவற்றை விரிவாக எடுத்துரைக்க வேண்டும் என்றும் பிரதமர் மோடி வலியுறுத்தினார்.

**பயனுள்ளதாக இருந்தது!**

இது குறித்து சமூக வலைதளத்தில் பிரதமர் மோடி வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: நேற்று அமைச்சரவைக் கூட்டம் பயனுள்ளதாக இருந்தது. தொழில் செய்வதை எளிதாக்குவதும், அவற்றை மேம்படுத்தியது குறித்தும், வளர்ச்சி அடைந்த இந்தியா என்ற நமது கனவை கனகமாக்குவதற்காக மேலும் சீர்திருத்தங்களை மேற்கொள்வது குறித்தும் நாங்கள் ஆலோசனைகளை மேற்கொண்டோம். இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார்.

# ஹார்முஸ் ஜலசந்தியே எங்க கட்டுப்பாட்டில் தான் இருக்குது; டிரம்ப்!



வாஷிங்டன், மே. 22–

ஈரான் அணு ஆயுதங்களை பெறாது; ஹார்முஸ் ஜலசந்தி எங்களது முழு கட்டுப்பாட்டில் இருக்கிறது என அதிபர் டிரம்ப் தெரிவித்தார்.

இது குறித்து வெள்ளை மாளிகையில் நிருபர்களிடம் அதிபர் டிரம்ப் கூறியதாவது: எங்கள் படையினர் முற்றுகையின் மூலம் ஹார்முஸ் ஜலசந்தி எங்களது முழு கட்டுப்பாட்டில் உள்ளது. ஈரான் அணு ஆயுதத்தைப் பெறாது.

இல்லையெனில் நாங்கள் கடுமையான நடவடிக்கை எடுப்போம். ஒரு வருடத்திற்கு முன்பு அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய வான்வழித் தாக்குதல்களைத் தொடர்ந்து நிலத்தடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த அணுப் பொருட்களை ஈரான் வைத்திருப்பதை அமெரிக்கா அனு மதிக்காது. நாங்கள் அதைப் பெறு வோம்; அதைப் பெற்ற பிறகு நாங்கள் அதை அநேகமாக அழித்துவிடுவோம், ஆனால் அதை அவர்கள் எடுத்துக்கொள்ள நாங்கள் அனுமதிக்க மாட்டோம். ஹார்முஸ் ஜலசந்தி சர்வதேச கப்பல் போக்குவரத்திற்காகத் திறந்திருக்க வேண்டும் என்று அமெரிக்கா விரும்புகிறது.

அங்கு தடையின்றி கப்பல் போக்குவரத்து இயங்க வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம், சுங்கக் கட்டணங்கள் வேண்டாம். அது சர்வதேசமானது, அது ஒரு சர்வதேச நீர்வழிப்பாதை. இவ்வாறு அதிபர் டிரம்ப் கூறினார்.

# ஜூன் 18-ல் ராஜ்யசபா இடைத்தேர்தல்!



புதுடெல்லி, மே. 22–

சி.வி.சண்முகம் ராஜினாமா செய்த ராஜ்யசபா பதவியிடத்துக்கான இடைத்தேர்தல் வரும் ஜூன் 18ம் தேதி நடக்கிறது.

அவையில் பெரும்பான்மை இருப்பதால், அந்த பதவியை தவெக எளிதில் கைப்பற்றும் நிலை உள்ளது. அதிமுக முன்னாள் அமைச்சர் சிவி சண் முகம் ராஜ்யசபா எம்பியாக இருந்தார். இவர் சமீபத்தில் நடந்த தமிழக சட்டசபைத் தேர் தலில், விழுப்புரம் மாவட்டம், மயிலம் தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். சட்டசபை தேர்தலில் வெ ற்றி பெற்ற அவர், ராஜ்யசபா எம்.பி., பதவியை ராஜினாமா செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதையடுத்து அவர் துணை ஜனாதிபதியும், ராஜ்யசபா சபாநாயகருமான ராதாகிருஷ்ணனை சந்தித்து, தனது ராஜினாமா கடிதத்தை அளித்தார். இதனால் ராஜ்யசபா எம்பி இடம் ஒன்று, தமிழகத்தில் காலியாகியுள்ளது. இந்நிலையில் சி.வி. சண்முகம் ராஜினாமா செய்த ராஜ்யசபா பதவியிடத்துக்கு ஜூன் 18ல் இடைத்தேர்தல் அறிவிக்க ப்பட்டு உள்ளது.

வேட்பு மனுத்தாக்கல் செய்ய கடைசி நாள்: ஜூன் 8ம் தேதி

வேட்பு மனு திரும்ப பெற கடைசி நாள்: ஜூன் 11ம் தேதி

தேர்தல்: ஜூன் 18ம் தேதி; அன்றைய தினம் மாலை 5 மணிக்கு தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும்.

தமிழக சட்டசபையில் கூட்டணி கட்சிகளுடன் சேர்ந்து தவெக அரசுக்கு பெரும்பான்மை இருப்பதால், இந்த எம்.பி., பதவியிடத்தை எளிதில் கைப்பற்றும் நிலை உள்ளது.

**பிற மாநிலங்கள்**

நாட்டின் 10 மாநிலங்களில் 24 எம்பிக்களின் பதவிக்காலமும் இதே காலத்தில் முடிவடைகிறது. இந்த பதவிக்கான தேர்தலும் ஜூன் 18ம் தேதி நடக்கிறது. ஆந்திராவில் 4 இடங்களும், குஜராத்தில் 4 இடங்களும், கர்நாடகாவில் 4இடங்களும், ராஜஸ்தானில் 3 இடங்களும், ஜார்க்கண்டில் இரண்டு இடங்களும், மத்திய பிரதேசத்தில் 3 இடங்களும், மணிப்பூர், மேகாலயா, அருணாச்சலம், மிசோரத்தில் தலா 1 இடங்களும் நிரப்பப்பட உள்ளன.

# விசிக, முஸ்லிம் லீக் அமைச்சர்கள் பதவியேற்பு!



சென்னை. மே. 22–

முதல்வர் விஜய் தலைமையிலான அமைச்சரவை மேலும் விரிவாக்கம் செய்யப்பட்டது.

விசிக எம்எல்ஏ வன்னியரசு, முஸ்லிம் லிக் எம்எல்ஏ ஷாஜகான் அமைச்சர்களாக பதவியேற்றுக்கொண்டனர். தமிழகத்தில், 72 ஆண்டுகளுக்கு பின், முதல்வர் விஜய் தலைமையில் கூட்டணி அரசு அமைந்துள்ளது. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இருவர் உட்பட, 23 அமைச்சர்கள் நேற்று புதிதாக பதவியேற்றனர்.

முஸ்லிம் லீக் மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த தலா ஒருவர் இன்று அமைச்சராக பதவியேற்றனர். அவர்களுக்கு கவர்னர் அர்லேக்கர் பதவி பிரமாணம் செய்து வைக்கிறேன்.

**இறைவன் மீது...**

முஸ்லிம் லீக் எம்எல்ஏ., ஷாஜஹான் இறைவன் மீது ஆணையிட்டு உறுதிமொழி கூறி அமைச்சராக பதவியேற்றார். இவருக்கு சமூக நீதித்துறை ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

**உளமாற....**

விசிக எம்எல்ஏ வன்னி அரசு உளமாற உறுதி கூறி அமைச்சராக பதவியேற்றார். சிறுபான்மையினர் நலத்துறை ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

# செங்கோட்டையன் இலாகா மாற்றம் செய்யப்பட்டது ஏன்?



சென்னை, மே. 22–

தனது கோரிக்கையை விஜய் ஏற்றதால் அமைச்சர் செங்கோட்டையன் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளதாக சொல்லப்படுகிறது.

முதல்–அமைச்சர் விஜய் அமைச்சரவையில் செங்கோட்டையனுக்கு முதலில் நிதித்துறை இலாகா ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் மக்களுடன் நேரடியாக தொடர்புடைய ஏதாவது ஒரு துறையை தனக்கு ஒதுக்கி கொடுத்தால் நன்றாக இருக்கும் என முதல்–அமைச்சர் விஜய்யிடம் அமைச்சர் செங்கோட்டையன் கோரிக்கை விடுத்திருந்தார்.

அவரது கோரிக்கையை ஏற்ற முதல்–அமைச்சர் விஜய், மக்களுடன் நேரடி தொடர்புடைய வருவாய்த்துறையை செங்கோட்டையனுக்கு ஒதுக்கினார்.

இதையடுத்து நிதி அமைச்சராக இருந்த அவர் வருவாய்– பேரிடர் நிர்வாகத்துறை அமைச்சராக மாற்றப் பட்டுள்ளார்.

இதனால் அமைச்சர் செங்கோட்டையன் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளதாக அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தனர்.

# கடல் கடந்து தங்கம் வாங்கும் இந்தியர்கள்!



இந்தியாவில் தங்கம் விலை தொடர்ந்து புதிய உச்சங்களைத் தொட்டு வரும் நிலையில், தங்கம் வாங்குவதற்காகவே இந்தியர்கள் பெருமளவில் கடல் கடந்து வெளிநாடுகளுக்கு செல்கின்றனர். அதிகபட்சமாக துபாய்க்கு செல்லும் பயணிகளின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது. சமீபத்தில் மத்திய அரசு, வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் தங்கத்தின் மீதான வரியை 6%–லிருந்து 15%–ஆக ஒரே அடியாக உயர்த்தியது.

இந்த கடுமையான வரி விதிப்பின் எதிரொலியால், இந்திய உள்நாட்டுச் சந்தையில் தங்கத்தின் விலை மிகக் குறுகிய காலத்தில் வரலாறு காணாத அளவிற்குக் கடகடவென உயர்ந்துள்ளது. இதனால் நடுத்தர மக்கள் மற்றும் முதலீட்டாளர்கள் பெரும் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளனர்.

மக்கள் தங்கம் வாங்குவதற்காக மாற்று வழிகளை தேடத் தொடங்கினர். வரி மற்றும் செய்கூலி, சேதாரம் போன்ற கூடுதல் கட்டணங்கள் குறைவாக இருக்கும் துபாய் போன்ற நாடுகளுக்குச் சென்று தங்கம் வாங்குவது தற்போது லாபகரமாக மாறியுள்ளது.

இதன் காரணமாக இந்தியாவிலிருந்து துபாய் சென்று தங்கம் வாங்குபவர்களின் எண்ணிக்கை தற்போதைய கணக்கின்படி, சுமார் 30% ஆக உயர்ந்துள்ளது. குறிப்பாக சுற்றுலா செல்லும் பயணிகள் அதிகமாக தங்கத்தை வாங்கி வருகின்றனர்.

இந்திய அரசின் தற்போதைய விதிமுறைகளின்படி, வெளிநாடுகளில் இருந்து இந்தியாவிற்கு திரும்பும் பயனாளிகள் குறிப்பிட்ட அளவிற்கு மட்டுமே தங்கம் கொண்டு வர அனுமதி உண்டு.

துபாயில் இருந்து நாடு திரும்பும் 4 பேர் கொண்ட ஒரு குடும்பம், அதிகபட்சமாக 140 கிராம் வரையிலான தங்க நகைகளைச் சுங்கவரியின்றி இந்தியாவிற்குள் சட்டப்பூர்வமாக கொண்டு வர முடியும்.

ஒரு ஆண் 20 கிராம் வரையிலும், ஒரு பெண் அதிகபட்சமாக 40 கிராம் வரையிலும் வரி இல்லாமல் கொண்டு வரலாம். இது தங்க நகைகளுக்கு மட்டுமே தவிர தங்க கட்டிகளுக்கோ, தங்க நாணயங்ளோ கொண்டு வந்தால் அதற்கு வரி விதிக்கப்படும் என்றும் தெளிவாக தெரிவித்துள்ளது.

இந்தியாவில் தங்கத்திற்கான தேவை எப்போதும் குறையாது. இந்தியாவில் தங்கம் மீதான வரி (15%) மிக அதிகம். அதனால் நகை விலையும் அதிகம். ஆனால், துபாயில் தங்கத்தின் மீதான வரி மற்றும் இதர கட்டணங்கள் மிக குறைவு, அதனால் அங்கு தங்கள் விலை மலிவாக இருக்கிறது.

இதனால் இந்திய விலையை விட பல மடங்கு லாபமாக இருக்கிறது, என நகை வியாபாரிகள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

# வாயு அஸ்த்ரா-1 ஏவுகணை சோதனை வெற்றி!



ஜெய்ப்பூர், மே. 22–

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட வாயு அஸ்த்ரா–1 ஏவுகணை சோதனையை புனேவைச் சேர்ந்த பாதுகாப்புத் தொழில்நுட்ப நிறுவனமான நிபே லிமிடெட் வெற்றிகரமாக செய்து முடித்தது.

இது இந்திய ராணு வத்தின் பயன்பாட்டுக்காக வழங்கப்பட இருக்கிறது.

ராஜஸ்தானில் நடத்தப்பட்ட இந்த சோதனையில் 10 கிலோ எடை கொண்ட ஏவுகணை சுமார் 100 கிலோ மீட்டர் பறந்து சென்று இலக்கை துல்லியமாக தாக்கி அழித்துள்ளது. சோதனையின் போது தாக்குதலை நடுவிலேயே ரத்து செய்யவும், மீண்டும் திருப்பி தாக்கும் திறன்களை கொண்டுள்ளது. தரைக்கட்டுப்பாட்டு நிலையத்திலிருந்து 70 கி.மீ தொலைவில் உள்ள மற்றொரு முன்களக் கட்டுப்பாட்டுப் பிரிவிற்கு ஏவுகணையின் செயல்பாட்டுக் கட்டுப்பாட்டை மாற்றும் திறன் வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது.

உத்தரகண்டின் ஜோஷிமத் பகுதியில் ஏவுகணையின் தொழில்நுட்ப மற்றும் உயர் மலைப்பகுதி சோதனைகள் நடத்தப்பட்டன. 14,000 அடிக்கும் அதிகமான உயரத்தில், 90 நிமிடங்களுக்கும் மேலாகத் தொடர்ந்து பறந்து ஏவுகணையின் நீண்ட நேரத் திறன் சோதனை செய்து பார்க்கப்பட்டது. முக்கியமாக, இலக்கை துல்லியமாக தாக்கி அழித்த பிறகு, இந்த ஏவுகணை மீண்டும் பயன்படுத்தும் திறனை கொண்டது.

முன்னதாக, மே 18 மற்றும் 19 ஆகிய தேதிகளில் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட சூர்யஸ்த்ரா ராக்கெட்டுகளின் ஏவுதல் சோதனைகளை இந்த நிறுவனம் வெற்றிகரமாக நடத்தியது. இந்த ராக்கெட்டுகள் 150 கி.மீ மற்றும் 300 கி.மீ தூரம் வரை சென்று தாக்கும் வரம்பைக் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

# முதலமைச்சரை சந்தித்து பேசணுமா?... தமிழ்நாடு அரசின் முக்கிய அறிவிப்பு!



சென்னை. மே. 22–

தமிழ்நாடு சட்டசபை தேர்தல் முடிவுகள் கடந்த 4–ந்தேதி வெளியானதை தொடர்ந்து 10–ந்தேதி முதலமைச்சராக த.வெ.க. தலைவர் விஜய் பொறுப்பேற்றுக்கொண்டார். அன்றே முதலமைச்சருடன் 9 அமைச்சர்களும் பொறுப்பேற்றுக்கொண்டனர். அதனை தொடர்ந்து அமைச்சரவை விரிவாக்கம் செய்யப்பட்டது. கூட்டணி கட்சிகளுடன் சேர்ந்து என 25 பேர் அமைச்சர்களாக பொறுப்பேற்றுக்கொண்டனர். இதனை தொடர்ந்து அவர்களுக்கான இலாக்காக்களும் ஒதுக்கப்பட்டது. இந்த நிலையில், முதலமைச்சரை சந்தித்து பேசுவதற்காக அனுமதி பெற office.tncm@gmail.com என்ற இ–மெயில் முகவரியை தொடர்புகொள்ள லாம் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

இதேபோல், கோரிக்கை மனுக்கள் அனுப்ப Cmo@tn.gov.in என்ற இ–மெயில் முகவரியை தொடர்பு கொள்ளலாம். மேலும், துறைகள் சார்ந்த கடிதப் போக்குவரத்திற்கு Tncmo–section2026@gmail.com என்ற இ–மெயில் முகவரியை அணுக வேண்டும் என்று தமிழக அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

# மேகதாது அணை விவகாரம்; தவெக அரசால் திடமான நிலைப்பாடு எடுக்க முடியுமா? இபிஎஸ் கேள்வி!



சென்னை, மே. 22–

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தனது எக்ஸ் பதிவில் கூறியிருப்பதாவது:

மேகதாது அணை கட்டுவதை எதிர்க்க தமிழகத்திற்கு உரிமை இல்லை'' என்று கர்நாடக மாநில துணை முதல் அமைச்சர் டிகே சிவக்குமார் தெரிவித்துள்ளார். காவிரியில் தமிழகத்தின் உரிமையை மழுங்கடிக்கும் வகையில் கர்நாடக காங்கிரஸ் அரசு செயல்படுவதும், அதை தமிழகத்தில் உள்ள அரசு கைகட்டி வேடிக்கை பார்ப்பதும், ஆட்சி மாறினும் மாறாத காட்சியாகவே உள்ளது. தமிழ்நாட்டை தற்போது ஆண்டுவரும் அரசு காங்கிரஸ் தயவில் உள்ள தமிழக வெற்றிக் கழகம் பொய்க்கால் குதிரை அரசாக செயல்படுவதால், கர்நாடக காங்கிரஸ் கட்சியை எதிர்த்து “திடமான” நிலைப்பாடு எடுத்து பேச முடியுமா?

மேகதாதுவில் பூமி பூஜை வரை பேசுவதற்கு கர்நாடக காங்கிரஸ் அரசுக்கு எங்கிருந்து தைரியம் வருகிறது ? தங்களால் ஆட்டுவிக்கப்படும் அரசு தான் தமிழ்நாட்டில் உள்ளது என்ற எண்ணமா ? காங்கிரஸ் தொடர்ந்து தமிழகத்திற்கு எதிராக செயல்படுவது கடும் கண்டனத்திற்குரியது.காவிரி நதிநீர் என்பது தமிழ்நாட்டின் ஜீவாதாரம் ஆகும். டெல்டா உள்ளிட்ட பல மாவட்ட விவசாயிகள் மட்டுமின்றி 20 மாவட்ட மக்களின் குடிநீர் ஆதாரமாகவும் காவிரியாறு விளங்கி வருகிறது. மேகதாதுவில், காவிரியின் குறுக்கே அணை கட்டினால் டெல்டா மாவட்டங்கள் பாலைவனமாகிவிடும்.

காவிரி தொடர்பாக தமிழகத்தின் உரிமை விட்டுக்கொடுக்கப்படுவதை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஒருநாளும் அனுமதிக்காது.கர்நாடக துணை முதல்வரின் இப்பேச்சு தமிழக விவசாயிகள் மற்றும் பொதுமக்களிடையே மிகப் பெரிய கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இவ்விவகாரத்தில் கர்நாடக காங்கிரஸ் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளை இந்த அரசு உடனடியாக எடுப்பதுடன், அரசின் தெளிவான நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்'' இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தாயும், சேயும் நலம்..!- வைரலாகும் சீமானின் பெண் குழந்தை புகைப்படம்!



நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மற்றும் கயல்விழி தம்பதியினருக்கு இரண்டாவதாக பெண்குழந்தை பிறந்துள்ளது.

சீமான் கடந்த 2013ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டப்பேரவையின் முன்னாள் சபாநாயகரான மறைந்த கே. காளிமுத்துவின் மகள் கயல்விழி என்பவரைத் திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு கடந்த 2019ம் ஆண்டில் ஆண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு மாவீரன் என பெயர் சூட்டினர். இந்நிலையில் இந்த தம்பதியினருக்கு நேற்று இரண்டாவதாக பெண் குழந்தை பிறந்துள்ளது. இதனால், சீமான் மற்றும் அவரது மனைவிக்கு அரசியல் மற்றும் திரை வட்டாரங்களில் இருந்து வாழ்த்து மழை பொழிந்து வருகிறது.சீமான் கடந்த 2013ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டப்பேரவையின் முன்னாள் சபாநாயகரான மறைந்த கே. காளிமுத்துவின் மகள் கயல்விழி என்பவரைத் திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு கடந்த 2019ம் ஆண்டில் ஆண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு மாவீரன் என பெயர் சூட்டினர்.

மருத்துவமனையில் குழந்தையை தூக்கி மகிழ்ந்த சீமானின் புகைப்படம் இணையத்தில் வைரலாகி வருகிறது.

7 ஆண்டு இடைவெளியில் பிறந்த தனது தங்கையை கண்டு மாவீரனும் மகிழ்ச்சி அடைந்துள்ளார். மேலும், மருத்துவமனையில் தாயும், சேயும் நலமுடன் இருப்பதாகவும், விரைவில் இருவரும் வீடு திரும்புவார்கள் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020